செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை: 124 நாள்: 20.05.2026

**சுவடியியல் புலம்**

நடத்தும்

**மூலபாடத் திறனாய்வு: திருக்குறள் உரைகள் – இணைய வழி**

(Textual Criticism: Commentaries on the Thirukkural - Online)

**ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி**

(Faculty Development Programme)

**பயிலரங்கம் – 5**

(04.06.2026 – 10.06.2026)

**அறிவிப்பும் அழைப்பும்**

பாடம் என்பது படிப்பதற்குரிய ஆக்கத்தைக் குறிக்கும். அப்பாடம் மூலபாடம் உரைப்பாடம் என்னும் இருவகையாகும். அவற்றில் மூலபாடம் என்பது மூல ஆசிரியரால் எழுதிய உரையில்லாத நூலைக் குறிப்பதாகும். அம்மூல நூல் காலங்கடந்து பொருள் நன்கு விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் அதற்கு உரையாசிரியர்களால் உரை எழுதப்பட்டது. அந்நூல் மூலத்துடன் இருந்தாலும் அது உரைப்பாடம் என்றே அழைக்கப்பட்டது.

நூல்கள் ஏட்டுச் சுவடியில் எழுதும் வழக்கமாதலின் அது குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அழியும் தன்மை உடையதாகும். அதனால் மூல ஆசிரியர் எழுதிய நூல் ஏடு எழுதுவோரால் மாற்று ஓலையில் படி எடுக்கப்பட்டது. அப்படியில் முன்னோர் எழுதியவை அப்படியே இருந்தாலும் சில நேரங்களில் எழுதுவோரின் கவனக்குறைவால் முன் நூலில் கண்டவற்றுக்கு மாற்றாகப் பாடங்களை எழுதிவிடுவதுண்டு. அப்பாடங்கள் **பிரதிபேதம், பாடபேதம், பாடாந்தரம்** என்னும் பெயர்களால் சுட்டப்படுகின்றன. இம்மாற்றுப் பாடங்கள் எந்தப் பாடத்தை மூல ஆசிரியர் எழுதினார் என்னும் ஆராய்ச்சிக்கு வழிவகுத்து விடுகின்றன. இவற்றை ஆய்வுகள் மூலமாகக் கண்டறிந்து ஆசிரியரின் உண்மையான பாடத்தை நிறுவுவதே மூலபாட ஆய்வாகும்.

மணக்குடவர், காலிங்கர், பரிதியார், பரிப்பெருமாள், பரிமேலழகர் போன்றோர் திருக்குறளுக்கு உரை இயற்றியுள்ளனர். இவ்வுரையாசிரியர்கள் இயற்றிய உரைகளுள் சில இடங்களில் வேறுபாடுகள் உண்டு. அத்தகைய வேறுபாடுகளை ஒப்புநோக்கி ஆய்வு மேற்கொண்டால் மூலபாடத்தை உறுதி செய்யமுடியும். அதனைக் கருத்தில் கொண்டு **‘மூலபாடத் திறனாய்வு: திருக்குறள் உரைகள்’** என்னும் பொருண்மையில் அமைந்த பயிலரங்கை **இணைய வழி**யில் நடத்த சுவடியியல் புலம் திட்டமிட்டுள்ளது. பயிலரங்கில் இத்துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்றுரை வழங்க உள்ளனர்.

இப்பயிலரங்கு 04.06.2026 முதல் 10.06.2026 முடிய 07 நாட்கள் இணைய வழியில் நடைபெறவுள்ள நிலையில் **நிறுவனம், பல்கலைக்கழகம், கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள்** மட்டும் கலந்து கொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - 50.
- பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 04.06.2026 **முதல்** 10.06.2026 **வரை** 7 **நாட்கள்.**
- பயிலரங்கு நேரம்: **மாலை** 03.00 – 05.30.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/SCyToutnHeGgaGXt5 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 27.05.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் எற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 29.05.2026 அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 14 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாகக் கலந்துகொள்வதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**